Anabond®

# ENVIRONMENTAL, OCCUPATIONAL HEALTH &SAFETY POLICY

Anabond is committed to:

- conserving natural resources and protecting the environment, whilst providing safe and healthy working conditions for our employees, contractors, visitors and other relevant interested parties;
- preventing pollution and the occurrence of work-related injury and ill-health;
- fulfilling all applicable compliance obligations (legal and other) relevant to our environmental aspects, Occupational Health and Safety risks and opportunities;
- setting a framework for establishing, reviewing and achieving environmental and Occupational Health and Safety objectives that are appropriate to our purpose, context and the nature, scale and impacts of our activities, products and services;
- continually improving our environmental performance and Occupational Health and Safety performance through effective management of our processes, design, operations and services across their life-cycle;
- reducing the use of natural resources, promoting the concepts of 3-R (Reduce, Reuse, Recycle), mitigating and adapting to climate change, and protecting biodiversity and ecosystems;
- eliminating hazards and reducing Occupational Health and Safety risks by consultation and participation of our workers and other stakeholders;
- ensuring that the necessary resources (people, infrastructure, technology, finances) are made available to establish, implement, maintain and improve both the EMS and OHSMS;
- communicating this policy to all persons working under our control, making it available to interested parties (via display, purchase orders, contracts, website, etc.).
- Imparting continuous awareness and training about the importance of Environmental Management System (EMS) and Occupational Health and Safety Management System (OHSMS) throughout the organization.

Doc No: AL/EHS/M006-Rev.No. 00
Dated : 05.05.2025

**Managing Director**

# சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கை

**அனபான்ட் இக்கொள்கையை பின்பற்ற உறுதிபூண்டுள்ளது:**

- இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதுடன், எங்களது பணியாளர்கள், ஒப்பந்ததாரர்கள், பார்வையாளர்கள் மற்றும் இதர தொடர்புடைய ஆர்வமுள்ள தரப்பினருக்கு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச்சூழலை வழங்குதல்.
- சுற்றுச்சூழல் மாசுபாட்டைத் தடுத்தல் மற்றும் வேலை தொடர்பான உடல் ரீதியான தீங்கு (காயம்) மற்றும் உடல்நலக் குறைபாடுகள் ஏற்படுவதை தடுத்தல்.
- எங்கள் சுற்றுச்சூழல் அம்சங்கள், தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான எதிர்மறையான விளைவு மற்றும் வாய்ப்புகள் தொடர்புடைய அனைத்து பொருந்தக்கூடிய இணக்கக் கடமைகளையும் (சட்டப்பூர்வமான மற்றும் இதர) நிறைவேற்றுதல்.
- எங்கள் நிறுவனத்தின் நோக்கம், சூழல், மற்றும் செயல்பாடுகள், தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தன்மை, அளவு மற்றும் தாக்கங்களுக்கு பொருத்தமான சுற்றுச்சூழல் மற்றும் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு இலக்குகளை நிர்ணயித்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் அதை அடைவதற்கான ஒரு கட்டமைப்பை அமைத்தல்.
- எங்கள் செயல்முறைகள், வடிவமைப்பு, செயல்பாடுகள் மற்றும் சேவைகளை அவற்றின் வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் **(Life-cycle)** அவற்றைத் திறம்பட நிர்வகிப்பதன் மூலம் எங்கள் சுற்றுச்சூழல் மற்றும் தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்பின் செயல்திறனைத் தொடர்ந்து மேம்படுத்துதல்.
- இயற்கை வளங்களின் பயன்பாட்டைக் குறைத்தல், **3-R** (குறைத்தல், மறுபயன்பாடு, மறுசுழற்சி) கொள்கைகளை ஊக்குவித்தல், காலநிலை மாற்றத்தைத் தணித்தல் மற்றும் அதற்கு ஏற்றவாறு மாற்றியமைத்தல், மற்றும் பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பாதுகாத்தல்.
- எங்கள் தொழிலாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் ஆலோசனை மற்றும் பங்களிப்புடன், ஆபத்துக்களை நீக்குதல் மற்றும் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான எதிர்மறையான விளைவுகளை குறைத்தல்.
- **EMS** மற்றும் **OHSMS** இரண்டையும் நிறுவ, செயல்படுத்த, பராமரிக்க மற்றும் மேம்படுத்தத் தேவையான ஆதாரங்களை (மனிதவளம், உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம், நிதி) கிடைப்பதை உறுதி செய்தல்.
- இக்கொள்கையை எங்களது கட்டுப்பாட்டில் பணிபுரியும் அனைத்து நபர்களுக்கும் தெரிவித்தல், ஆர்வமுள்ள தரப்பினருக்கு (காட்சிப் பலகைகள், கொள்முதல் ஆணைகள், ஒப்பந்தங்கள், இணையதளம் போன்றவை மூலம்) கிடைக்கச் செய்தல்.
- சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு **(EMS)** மற்றும் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பு **(OHSMS)** ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து நிறுவனம் முழுவதும் மற்றும் தொடர்புடைய தரப்பினரிடையே தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் பயிற்சியை வழங்குதல்.

Doc No: AL/EHS/M006-Rev.No. 00
Dated : 05.05.2025

**Managing Director**